2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 24 கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கெல்லாம் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. (குறுக்கீடு) பதில் வர, வர நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்றும் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அறிவிப்பை எடுக்க இருக்கிறேன். (குறுக்கீடு) பதில் வந்தவுடன் எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) நிச்சயம் நான் எடுப்பதற்கு முயற்சி எடுக்கிறேன். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

முற்பகல் 11—20

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வராஹா' ரோந்து கப்பல், இலங்கைக்கு இந்திய அரசால் கொடுக்கப்பட்டுள்ள காரணத்தினால், தமிழக மீனவர்களுடைய உரிமை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து எல்லாவற்றையும் என்னுடைய அறையிலேயே உங்களிடம் விவரமாகச் சொல்லிவிட்டேன். நீங்கள் தேவையான பிரச்சினை குறித்து raise செய்யுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினத்திலிருந்து சுங்கச்சாவடிக் கட்டணங்களைக் கடுமையாக உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் விலைவாசி உயரும் என்று பொது மக்கள் பயப்படுகிறார்கள். அதுசம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் விழுப்புரம் மாவட்டம், சேஷசமுத்திரம் கிராமத்தில் நடைபெற்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், இது குறித்து நான் பிறகு சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது உங்களுக்குப் பேச அனுமதி தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். உங்கள் தலைவர்தான் இப்பொழுது பேசினாரே, பிறகு நீங்களும் திரும்ப எழுந்து வாய்ப்பு கேட்டால் எப்படி? ஒரு கட்சிக்கு ஒருவருக்குத்தானே வாய்ப்பு.*

திரு. டி. செங்குட்டுவன்: *நேற்றைக்கு தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் பரிசல் விபத்தில் 6 பேர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து நேற்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான அறிக்கை கொடுத்துவிட்டார்கள். அதற்கு நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) அதைப்பற்றியெல்லாம் raise செய்யக் கூடாது, உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. மைக்கேல் ராயப்பன், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *நாங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தோம். அதுசம்பந்தமாவாவது நீங்கள் எடுக்க வேண்டும். அதையும் எடுக்க மாட்டேன் என்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதையெல்லாம் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள்.*